27. செங்கல்ராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் வளி அழுத்த முறையில் இயங்கும் Pan valve (திறப்பு தடுக்கிதழ்) 20 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்

Pan valve (திறப்பு தடுக்கிதழ்) இயக்குதலை எளிமைப்படுத்தும் விதமாக வளி அழுத்த முறையில் இயங்கும் Pan valve ஒன்று, செங்கல்ராயன் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் 20 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை மாமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு எனக்கு எல்லா வகையிலும் உடனிருந்து, வழிகாட்டி, பணியாற்றிய எங்களுக்கு உதவி செய்த மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்கள், நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள், தொழில் துறைச் செயலாளர் திரு. முருகானந்தம், I.A.S., உள்ளிட்ட தொழில் துறையின் அதிகாரிகள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், I.A.S., உள்ளிட்ட தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் விலக்கிக்கொண்டு இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டு, மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்து, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

5. காவேரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் மேகதாது குறுக்கே அணைக் கட்டுவது தொடர்பாக விவாதிக்கப்படாது என வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவைக்கு ஒரு மகிழ்ச்சிகரமான

செய்தி. Cauvery Water Management Authority-*ல் மேகதாது பற்றி விவாதிக்கப் போகிறார்கள் என்ற செய்தி வந்த பிறகு, இந்த அவையே ஒருமுகமாக அதை எதிர்த்து குரல் கொடுத்ததை நாம் அறிவோம். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் சார்பில் இதுகுறித்து நாங்கள் எங்களின் அதிருப்தியைத் தெரிவிப்போம்; அந்த அமைச்சர் அவர்களிடம் பேசுவோம் என்று அப்போது நான் தெரிவித்தேன். இன்று காலை சட்டமன்றம் வந்த பிறகு, பத்தரை மணிக்கு, மத்திய ஜல்சக்தித் துறை அமைச்சர் அவர்களோடு பேசினேன். அவருக்கே இந்த* Agenda *வந்தது தெரியாது. ஏனென்றால், இது* Central Water Commission *நடத்துகிறது. ஆகையினால், உங்கள் எதிர்ப்பை அங்கே தெரிவியுங்கள் என்று சொன்னார்கள். அதனடிப்படையில் தெரிவிக்கப்பட்ட பிறகு, மேகதாது பிரச்சினையைப் பேசுவதில்லை என்று அந்த* Agenda-*விலிருந்து எடுத்துவிட்டார்கள் என்ற செய்தியை உங்களுக்கு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

4. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்-*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 41-வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

(இ) கோரிக்கை எண் 27-தொழில் துறை

(ஈ) கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்) துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.*